மலைவாழ் மக்களுக்கான மருத்துவ முகாம்! தேனி மாவட்டம் –

குரங்கனியில் 'குறிஞ்சி நலம்' மருத்துவ சேவை!

அமைப்பின் நிறுவனர் - முன்னாள் அமைச்சர் மா.சுப்பிரமணியன் தொடங்கி வைத்தார்!

தங்க தமிழ்ச் செல்வன் எம்.பி. – முன்னாள் எம்.எல்.ஏ. போடி லட்சுமணன் பங்கேற்பு!





தேனி, அக்.28 –

மலைவாழ் மக்களுக்கான முதல் மருத்துவ முகாமினை 'குறிஞ்சி நலம்' மருத்துவ சேவை அமைப்பின் நிறுவனர் மா.சுப்பிரமணியன் தேனி மாவட்டம் குரங்கனியில் தொடங்கி வைத்தார்.

தங்க தமிழ்ச்செல்வன் எம்.பி., முன்னாள் எம்.எல்.ஏ. போடி லட்சுமணன் உள்ளிட்டோர் இதில் பங்கேற்றனர்.

அதன் விவரம் வருமாறு:-

ஆட்சியில் இருந்தாலும், இல்லாவிட்டாலும் அடித்தட்டு மக்களின் நலனையும், அவர்களின் முன்னேற்றத்தையும் குறிக் கோளாய், திராவிடர் இயக்கத்தின் பண்பட்ட கொள்கைகளோடு சற்றொப்ப ஓர் நூற்றாண்டு காலமாய் வெற்றித் தோல்விகளைப் பற்றி கவலைப்படாமல், தடை படாமல் செயல்பட்டு அரசியல் இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம்.

ஆட்சி, அதிகாரத்தில் வீற்றிருந்தபோதும், எண்ணற்ற மருத்துவ நலன் சார்ந்த முன்னோடித் திட்டங்களை செயல்படுத்தி, ஐ.நா. போன்ற மிக உயர்ந்த அமைப்புகளால் பாராட்டப்பட்டு, நாட்டிற்கு மட்டுமல்ல, உலகத்திற்கே முன்மாதிரியாக நின்றது தி.மு.க. தலைமையிலான திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகள்.

மேனாள் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் கடந்த 2021ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 5ஆம் நாள் கிருஷ்ணகிரி மாவட்டம், சாமணப்பள்ளியில் தொடங்கப்பட்டு செயல்படுத்தப் பட்டதுதான் மக்களைத் தேடி மருத்துவத் திட்டம், மருத்துவ சேவையை மக்களிருக்கும் இல்லங்களுக்கேத் தேடி சென்று அவர்களின் உடலில் உள்ள நோய்களுக்கு மருந்துகள் வழங்கப் பட்டு, ஏழை, எளிய மக்களின் நலனில் மிகப்பெரிய அக்கறையும், பொறுப்பும் கொண்ட ஓர் முன்மாதிரியான அரசாக செயல்பட்டது. அதில் மருத்துவமே கிடைக்கப் பெறாத மலைவாழ் மக்களின் வாழ்வில் மருத்துவத் திற்காக ஒரு புது வெளிச்சம் பாய்ச்சப்பட்டது என்றால் அதில் மிகையில்லை.

தற்போது மேனாள் மருத்துவத்துறையின் அமைச்சர்மா.சுப்பிரமணியனின் சிறப்பான முயற்சியால் மலைவாழ் மக்களுக்கு மருத்துவச் சேவையை தொடர்ந்து வழங்குவதற்காக "குறிஞ்சி நலம்" என்ற தன்னார்வ மருத்துவத் தொண்டு நிறுவனத்தை கடந்த வாரம் தேனாம் பேட்டையில் உள்ள அண்ணா அறிவாலயத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்கள்.

இந்த மருத்துவத் தொண்டின் முதல் நிகழ்வு (25-10-2026) தேனி மாவட்டம், குரங்கனி மலைப்பகுதியில் இந்த மலைபகுதியில் வசிக்கும் மக்கள் பயனடையும் வகையில் மலைவாழ் மக்களைத்தேடி சிறப்பு மருத்துவர்களின் மாபெரும் அணிவகுப்பு எனும் பொருளில் மருத்துவ முகாம் நடைபெற்றது.

இம்மருத்துவ முகாமில் பல்துறைகளைச் சேர்ந்த அதாவது, பொது மருத்துவம், சிறப்பு அறுவை சிகிச்சை, யோகா மற்றும் இயற்கை மருத்துவம், குழந்தைகள் மற்றும் பெரியவர்களுக்கான பிற விசார் இதயக் கட்டமைப்பு, குழந்தை களுக்கான சிறப்பு மருத்துவம், முதுநிலை மகளிர் மகப்பேறு மருத்துவம், காது, மூக்கு, தொண்டை மருத்துவம், நரம்பியல் மருத்துவம், நுரையீரல் சிறப்பு மருத்துவம், எலும்பு முறிவு சிறப்பு மருத்துவம், மூத்த குழந்தைகள் நல மருத்துவம், பல் மருத்துவம், கண் மருத்துவம் மற்றும் தோல் மருத்துவம் சேர்ந்த மருத்துவர்கள், மருத்துவ நிபுணர்கள் பங்கேற்று இந்த மலைபகுதியில் வசிக்கும் ஆயிரக்கணக்கான ஏழை, எளிய மக்கள் தங்களுக்கான மருத்துவத்தை தாங்கள் வசிக்கும் மலைப்பகுதியிலேயே பெற்றது மிகுந்த மகிழ்ச்சியையும், புத்துணர்ச்சியையும் ஏற்படுத்தி மிகப்பெரிய அளவுக்கு மருத்துவ பயனை பெற்றனர் என்று இம்மலைப்பகுதியில் வசிக்கும் மக்கள் அனைவரும் தெரிவித்தனர்.

இது போன்ற மக்கள் நலன் பயக்கும் பணிகளை இடைவிடாது மேற்கொள்ளும் முன்னாள் மருத்துவத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியனுக்கு நன்றி தெரிவித்து, இலவசமாக மருந்து, மாத்திரைகளைப் பெற்றுச்சென்றனர்.

தமிழ்நாடு போலீஸ்

செஞ்சி சிறுமியை கண்டுபிடிக்க முடியாமல் திணறுகிறது!

பிரேமலதா குற்றச்சாட்டு!



அரியலூர், சுஅக். 28 -

அரியலூரில் தே.மு.தி.க. பொதுச்செயலாளர் பிரேமலதா எம்எல்ஏ நேற்று முன் தினம் நிருபர்களுக்கு அளித்த பேட்டி: பருவ மழை காலத்தில் எவ்வளவு பெரிய மழை வந்தாலும், நாங்கள் சமாளிக்க தயார் என தமிழக அரசு கூறியுள்ளது. குண்டும் குழியுமாக இருக்கின்ற சாலைகளை சரி செய்து, விவசாயிகளுக்கும், மக்களுக்கும் இந்த அரசு பாதுகாப்பான அரசாக இருக்க வேண்டும்.

மழை வெள்ளம் குறித்த முன்னெச்சரிக்கை அறிவிப்புகளை அரசு உடனடியாக வெளியிட வேண்டும். நீர் வழித்தடங்களில் உள்ளவர்களுக்கு முன்னறிவிப்பு கொடுக்க வேண்டும். அது தவறும் பட்சத்தில், மக்கள் பாதிக்கப்படுவர் என்பதற்கு உதாரணம் தான், கடலூர் மாவட்டம் வெள்ளாற்றில் நடந்துள்ள சம்பவம்.

குழந்தைகள் தொடர் மாயம்!

தமிழ்நாட்டில் செஞ்சி, கோவை, திருப்பூரில் உள்ளிட்ட பல இடங்களில் சிறு குழந்தைகள் தொடர்ந்து காணாமல் போய் கொண்டுள்ளனர்.

செஞ்சி சிறுமி காணாமல் போய் 12 நாட்கள் ஆன நிலையில் அந்த குழந்தையின் நிலை என்ன? என்பது தற்போது வரை தெரியாமலே உள்ளது. காவல்துறை இன்று மிகப் பெரிய சவாலை சந்தித்து கொண்டுள்ளது. ஸ்காட்லாந்து யார்ட் போலீசுக்கு இணையாக பேசப்பட்ட தமிழ்நாடு காவல்துறை, செஞ்சி சிறுமியை கண்டுபிடிக்க முடியாமல் திணறுவது மனதுக்கு கஷ்டமாக உள்ளது.

6 மாதத்தில் மாற்றம் வந்துள்ளதா?

த.வெ.க. அரசு இந்த விசயத்தில் அதிக கவனம் செலுத்த வேண்டும். இரண்டு நாட்களுக்கு முன்பு முதல்வரை சந்தித்து எனது தம்பி இல்ல திருமண விழா நிகழ்ச்சி அழைப்பிதழ் கொடுக்க சென்றபோது கூட, அவரிடம் இது குறித்து பேசி உள்ளேன். தனிப்பட்ட முறையில் உரிமையுடன் இதனை நான் விஜயிடம் எடுத்துக் கூறியுள்ளேன்.

மாற்றம் என்று ஒரு ஆட்சி வந்துள்ளது. மக்கள் அதனை நம்புகின்றனர். நேரலையில் தற்போது எல்லாவற்றையும் பார்க்கின்றனர். இந்த அரசு என்ன அறிவிக்கும்? என எல்லோரும் எதிர்பார்க்கின்றனர். அதில் கவனம் செலுத்த வேண்டும் என்பதை விஜயிடம் வலியுறுத்தி தான் வந்தேன். 6மாதம் ஆன நிலையில், இந்த அரசு உண்மையில் மாற்றம் தந்துள்ளதா? என்பதை சொல்ல வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

அரசியல் பழிவாங்கும் நோக்கில் – முன்னாள் அமைச்சர்

அன்பில் மகேஸ் பொய்யாமொழி கைது கண்டனத்திற்குரியது!

ஆதித்தமிழர் பேரவைத் தலைவர் இரா.அதியமான் அறிக்கை!



சென்னை, அக். 28 -

"அரசியல் பழிவாங்கும் நோக்கில் முன்னாள் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி கைது செய்யப்பட்டிருப்பது கண்டனத்திற்குரியது" என்று ஆதித் தமிழர் பேரவையின் நிறுவனர் - தலைவர் இரா.அதியமான் தெரிவித்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:-

அரசியல் பழிவாங்கும் நோக்கில் முன்னாள் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்களைக் கைது செய்திருப்பது கண்டனத்திற்குரியது!

தன் மீதான குற்றச்சாட்டுகள் தொடர்பான விசாரணைக்கு முழு ஒத்துழைப்பு அளித்து வந்த முன்னாள் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்களைக் கைது செய்திருப்பது அரசியல் பழிவாங்கும் நடவடிக்கையா என்ற வலுவான கேள்வியை எழுப்புகிறது.

தமிழகத்தில் நிலவும் சட்டம் ஒழுங்கு சீர்கேடுகள், நிர்வாகத் தோல்விகள் மற்றும் மக்கள் எதிர்கொள்ளும் அன்றாடப் பிரச்சினைகள் குறித்து எழுந்துள்ள கேள்விகளிலிருந்து மக்களின் கவனத்தைத் திசைதிருப்புவதற்காக இத்தகைய கைது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றனவோ என்ற சந்தேகமும் எழுகிறது.

குற்றச்சாட்டுகள் எவர் மீது சுமத்தப்பட்டாலும், அவை சட்டத்தின் அடிப்படையில் விசாரிக்கப்பட வேண்டும். அதேவேளையில், விசாரணைக்கு ஒத்துழைப்பு அளித்து வரும் ஒருவரைக் கைது செய்வதற்கான காரணங்களும் சட்டத்தின் வெளிச்சத்தில் நியாயப்படுத்தப்பட வேண்டும். சட்டம் என்பது அரசியல் பழிவாங்கலுக்கான கருவியாகப் பயன்படுத்தப்படக் கூடாது.

அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்கள் தன் மீதான குற்றச்சாட்டுகளைச் சட்டப்படி எதிர் கொள்வார். ஆனால், கைது நடவடிக்கைகள் மூலம் அரசியல் எதிர்ப்பாளர்களை அச்சுறுத்தவும், ஆளும் தரப்பின் மீதான விமர்சனங்களை மழுங்கடிக்கவும் முடியும் என்று யாரேனும் கருதினால், அது ஜனநாயகத்திற்கு எதிரான அணுகுமுறையாகும்.

அரசியல் அதிகாரம் என்பது மக்களுக்குச் சேவை செய்வதற்கானதே தவிர, அரசியல் பழிவாங்கலுக்கானது அல்ல! ஜனநாயகத்தின் மாண்பையும், சட்டத்தின் ஆட்சியையும் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு ஆட்சியாளர்களுக்கே அதிகம் உள்ளது.

எனவே, இந்தக் கைது நடவடிக்கை தொடர்பான சட்டபூர்வமான காரணங்களை வெளிப்படையாக விளக்க வேண்டும் என்றும், சட்டம் அனைவருக்கும் சமமாகச் செயல்படுவதை உறுதிப்படுத்த வேண்டும் என்றும் வலியுறுத்துகிறேன்.

'மக்களின் கவனத்தைத் திசைதிருப்புவதன் மூலமோ, அரசியல் எதிர்ப்பாளர்கள் மீது நடவடிக்கைஎடுப்பதன்மூலமோ மக்கள் மத்தியில் எழும் அதிருப்தியை அடக்கிவிட முடியாது. ஜனநாயகத்தின் குரலை ஒடுக்க நினைப்பவர்கள் மக்களின் தீர்ப்புக்கு ஒருநாள் பதில் சொல்லியே ஆக வேண்டும்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கூறியுள்ளார்.

தொ.மு.ச. பேரவைத் தலைவர் கி.நடராசன் கண்டன உரையாற்றுகிறார்!

த.வெ.க. அரசின் போக்குவரத்து கழக நிர்வாக சீர்கேடுகளை கண்டித்து ஆர்ப்பாட்டம்!

மாநகர் போக்குவரத்து கழக ஊழியர் முன்னேற்ற சங்கப் பொதுச் செயலாளர் த.சரவணகுமார் அறிக்கை!

சென்னை, அக். 28 -

மாநகர் போக்குவரத்து கழக ஊழியர் முன்னேற்ற சங்கப் பொதுச் செயலாளர் த.சரவணகுமார் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

போக்குவரத்து கழகத் தொழிலாளர்களுக்கு 20% போனஸ்,10 சதவீத ஊக்கத் தொகை வழங்குதல், வெற்றிப் பயணப் பேருந்துகளில் பணிபுரியும் தொழிலாளர்களின் தினப்படி / வசூல் படியை உயர்த்துதல், போக்குவரத்து கழகங்களில் பணிபுரிந்து ஓய்வு பெற்றோர் - இயற்கை எய்திய தொழிலாளர்களின் பண பலன்களை உடனே வழங்குதல்,



தினந்தோறும் டீசல் செலவை ஈடு செய்ய நடவடிக்கை எடுத்தல், போக்குவரத்து கழக பேருந்துகளின் பராமரிப்பை மேம்படுத்துதல் ஆகிய கோரிக்கைகளை வலியுறுத்தி இன்று (28.10.2026-புதன்கிழமை) மாலை 4 மணி அளவில், பல்லவன் இல்ல முன்பாக பல்லவன் சாலையில், மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது.

சங்க பொதுச் செயலாளர் த.சரவணகுமார், சங்கத் தலைவர் கோ.மோகன்குமார் ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.

தொ.மு.ச. பேரவை தலைவர் கி.நடராசன் சிறப்புரை ஆற்றுகிறார்.

சங்கப் பொருளாளர் கி.சீனிவாசன் நன்றி கூறுகிறார்.

இந்த ஆர்ப்பாட்ட வாயிற் கூட்டத்திற்கு தலைமைச் சங்க நிர்வாகிகள், பணிமனை செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள் மற்றும் சங்க முன்னோடிகள் என அனைவரும் பல்லவன் இல்லம் நோக்கி திரண்டு வந்து கலந்து கொள்ள வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு மாநகர் போக்குவரத்து கழக ஊழியர் முன்னேற்ற சங்கப் பொதுச் செயலாளர் த.சரவணகுமார் தெரிவித்துள்ளார்.

சேலம் மத்திய மாவட்ட கழக –

மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

மாவட்டச் செயலாளர் இரா.இராஜேந்திரன் அறிக்கை!

சேலம், அக்.28 -

சேலம் மத்திய மாவட்டக் கழகச் செயலாளர் - முன்னாள் அமைச்சர் இரா.இராஜேந்திரன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

சேலம் மத்திய மாவட்டக் கழக மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் இன்று (28.10.2026 ஆம் நாள் புதன்கிழமை) காலை 10.00 மணிக்கு மாவட்டக் கழக அலுவலகம் "கலைஞர் மாளிகை"யில் மாவட்டக் கழக அவைத்தலைவர் ஜி.கே.சுபாசு முன்னிலையில் நடைபெற உள்ளது. இக்கூட்டத்தில் மாவட்டக் கழக நிர்வாகிகள், மாநகர கழக நிர்வாகிகள், தலைமைச்செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றியக் கழக செயலாளர்கள், பகுதிகழக செயலாளர்கள், பேரூர் கழக மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், ஒன்றிய, பகுதி, பேரூர் கழக மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாநகர, மாநகராட்சி 2ம் மண்டலத்தலைவர் தம்பி ஆர்.கோவிந்தராஜ், பாண்டியன்நகர் கருப்புசாமி, வி.வி.ஜி.காந்தி, மனோகரன், வட்டக் கழக செயலாளர்கள் ரத்தினசாமி, ஸ்ரீதர், மயில்சாமி, வடக்கு மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் பார்த்திபன், துணை அமைப்பாளர்கள் சிவக்குமார், வஞ்சிமுத்து, ராம்குமார், இளைஞர் அணி ராஜேஷ் உள்பட பலர் உள்ளனர்.



கழக செயலாளர்கள், மாநகரத்தில் உள்ள வட்டக் கழக செயலாளர்கள், மாவட்ட, மாநகரக் மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், ஒன்றிய, பகுதி, பேரூர் கழக மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாநகர, மாநகராட்சி 2ம் மண்டலத்தலைவர் தம்பி ஆர்.கோவிந்தராஜ், பாண்டியன்நகர் கருப்புசாமி, வி.வி.ஜி.காந்தி, மனோகரன், வட்டக் கழக செயலாளர்கள் ரத்தினசாமி, ஸ்ரீதர், மயில்சாமி, வடக்கு மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் பார்த்திபன், துணை அமைப்பாளர்கள் சிவக்குமார், வஞ்சிமுத்து, ராம்குமார், இளைஞர் அணி ராஜேஷ் உள்பட பலர் உள்ளனர்.

தொண்டர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கீழ்அமைப்புகளில் உள்ள மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி நிர்வாகிகள் என அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

பொருள் : 1. பெண்கள் குழந்தைகள் பாதுகாப்பின்மை மற்றும் விலைவாசி உயர்வை கண்டித்து தி.மு.க மகளிர் அணி சார்பில் 31.10.2026 அன்று நடைபெறவுள்ள மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்.

இவ்வாறு மாவட்டச் செயலாளர் இரா.இராஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

அரசியல் காரணங்களுக்காக எம்.எல்.ஏ. பதவியை

ராஜினாமா செய்பவர்கள் மீண்டும் தேர்தலில் போட்டியிட தடை கோரிய வழக்கு!

ஒன்றிய அரசு - தேர்தல் ஆணையத்துக்கு உச்சநீதிமன்றம் நோட்டீஸ்!

புதுடெல்லி, அக்.28 -

அரசியல் காரணங்களுக்காக எம்.எல்.ஏ. பதவியை ராஜினாமா செய்துவிட்டு மீண்டும் தேர்தலில் போட்டியிட தடை விதிக்க தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிடக் கோரிய வழக்கில் பதிலளிக்குமாறு ஒன்றிய அரசுக்கும், தேர்தல் ஆணையத்துக்கும் உச்சநீதிமன்றம் நோட்டீஸ் அனுப்பி உள்ளது.

அரசியல் காரணங்களுக்காக எம்.எல்.ஏ. பதவியை ராஜினாமா செய்துவிட்டு மீண்டும் தேர்தலில் போட்டியிட தடை விதிக்க தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிடக் கோரி, வழக்கறிஞர் சுதன் தாக்கல் செய்த மனுவை சென்னை உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்தது. இந்த உத்தரவை எதிர்த்து சுதன் உச்சநீதிமன்றத்தில் மேல் முறையீடு மனுவை தாக்கல் செய்துள்ளார்.

இந்த மனு தலைமை நீதிபதி அமர்வில் நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது தேர்தல் முடிந்த பிறகு ராஜினாமா செய்துவிட்டு வேறு கட்சியில் இணைந்து போட்டியிடுவதை தடுக்க வேண்டும். அப்படி இடைதேர்தல் நடைபெறும் போது அதற்கான செலவை வேட்பாளரிடம் இருந்து வசூலிக்க வேண்டும். இது மிக முக்கியமான பிரச்சினை என்பதால், சட்ட ஆணையம் இது குறித்து சில கருத்துக்களை முன்பு வெளியிட்டுள்ளது என்றும் மனுதாரர்களின் வழக்கறிஞர்கள் வாதிட்டனர். இதனை பதிவு செய்து கொண்ட நீதிபதிகள், இவ்விவகாரம் குறித்து நீதியரசர்கள் ஒன்றிய அரசும், தேர்தல் ஆணையமும் பதிலளிக்க நோட்டீஸ் அனுப்பி உத்தரவிட்டனர்.



கழக மறு சீரமைப்பு கூடலூர் சட்டமன்றத் தொகுதி நகர, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள் கூட்டம். திராவிட முன்னேற்ற கழக தலைவர் மாண்புமிகு தளபதி அவர்கள் அறிவிப்பின்படி நீலகிரி மாவட்டத்தில் உள்ள நகர , ஒன்றிய, பேரூர் கழக மறுசீரமைப்பு பணியின் இரண்டாவது கட்டமாக மேற்கொள்ளும் பணிகள் குறித்து கூடலூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட நகர, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள் கூட்டம் மாவட்டக் கழக பொறுப்பாளர் குன்னூர் சட்டமன்ற உறுப்பினர் கே.எம்.ராஜு அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தலைமை கழக பிரதிநிதி கழக கொள்கை பரப்பு இணை செயலாளர் வழக்கறிஞர் இரா.ராஜீவ்காந்தி அவர்கள் முன்னிலை வகித்து புதிதாக கிளை கழகங்கள் அமைப்பதற்கான தலைமை கழகத்தின் வழிகாட்டு நெறிமுறைகளை விளக்கி பேசினார். கூட்டத்தில், மாவட்ட அவை தலைவர் போஜன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் காசிலிங்கம், தலைமை பொதுக்குழு உறுப்பினர் அமிர்தலிங்கம், தலைமை கழக சொற்பொழிவாளர் பாண்டியராஜ், மாவட்ட திட்டக்குழு உறுப்பினர் ராஜேந்திரன், நகர செயலாளர்கள் சேகரன், இளஞ்செழியன், ஒன்றிய செயலாளர்கள் சிவானந்தராஜா, சுஜேஷ், ராஜா, உத்தமன், பேரூர் கழக செயலாளர்கள் செல்வரத்தினம், சுப்ரமணி, உதயகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.



கழக இளைஞர் அணி செயலாளர், சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களால் இளைஞர் அணி சமூகக் கல்வி அறக்கட்டளையின் சார்பில் உடல் நலக்குறைவால் பாதிக்கப்பட்ட திருப்பூர் வடக்கு மாநகரம், 1வது வட்டக் கழக பொருளாளர் சிவக்குமாரின் மருத்துவச் செலவிற்கும், பராமரிப்பிற்கும் உதவும் வகையில் வழங்கப்பட்ட ரூபாய் 25,000/க்கான காசோலையை திருப்பூர் வடக்கு மாநகரக் கழகப் பொறுப்பாளர் ஈ.தங்கராஜ் வழங்கினார். இதில் திருப்பூர் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் விஸ்வநாதன், மாநகர துணைச் செயலாளர் செங்குட்டுவன், சிவபாலன், மாநகராட்சி 2ம் மண்டலத்தலைவர் தம்பி ஆர்.கோவிந்தராஜ், பாண்டியன்நகர் கருப்புசாமி, வி.வி.ஜி.காந்தி, மனோகரன், வட்டக் கழக செயலாளர்கள் ரத்தினசாமி, ஸ்ரீதர், மயில்சாமி, வடக்கு மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் பார்த்திபன், துணை அமைப்பாளர்கள் சிவக்குமார், வஞ்சிமுத்து, ராம்குமார், இளைஞர் அணி ராஜேஷ் உள்பட பலர் உள்ளனர்.